# செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்,
# சென்னை – 600 040.

ஒரு மொழியிலுள்ள சொற்களையெல்லாம் திருந்திய வடிவில் தொகுத்து, அவற்றறின் முதலெழுத்துகள் நெடுங்கணக்கு அல்லது குறுங்கணக்கு முறையில் அமைய அச்சொற்களை வரிசைப்படுத்தி, ஒவ்வொரு சொல்லுக்கும் அடிப்படைப் பொருளையும் வழிநிலைப் பொருள்களையும் ஏரணத்திற்குப் பொருந்த வரலாற்று முறையில் குறித்து, இலக்கியமிருப்பின் இருவகை வழக்கினின்றும், அஃதின்றேல் உலகவழக்கினின்றும், அப்பொருள்கட்குச் சான்றாக மேற்கோள்கள் எடுத்துக்காட்டி, இறுதியில் அவ்வச் சொல்லின் வேரொடு கூடிய வரலாற்றை வரைந்து இனச்சொற்களையும் காட்டுவது, முழுநிறைவான சொற்பிறப்பியல் பேரகரமுதலியாகும்.

தமிழக அரசு 1974ஆம் ஆண்டு மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் தலைமையில் 12 மடலங்களில் (volumes) அடங்கும் 31 தொகுதிகளைக் (parts) கொண்ட செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி (A Comprehensive Etymological Dictionary of the Tamil Language) உருவாக்கும் திட்டம் வேறெந்தத் துறையும் மேற்கொள்ளாதத் தனித்த நோக்கும், உலகளாவிய ஆராய்ச்சித் தகுதியும் கொண்டதாதலின் தனித்த இயக்ககமாக உருவாக்கியது. 1981–இல் பாவாணர் மறைந்த பிறகும் திட்டம் தொடர வேண்டும் என்றும், வண்ணப்பட விளக்கங்களொடு வெளிவர வேண்டும் என்றும் அப்போதைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அறிவுறுத்தியதற்கிணங்க, இத்திட்டம் தொடர்ந்தது. 1995–இல் நடந்த எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டின்போதும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் இத்திட்டத்திற்கு ஊக்கமளித்தார்கள்.

1985–இல் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி முதன்மடல முதற்பகுதி ‘அ’ பகுதி வெளியிடப்பட்டது. 2011–இல் “தமிழ்ச் சொற்பிறப்பியல் நெறிமுறைகள்” எனும் பேரகரமுதலியின் 31–ஆவது பகுதியும் இறுதிப் பகுதியும் வெளியிடப்பட்டது. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி 31 பகுதிகள் 12000 பக்கங்கள் கொண்டவையாகும். இது இங்கிலாந்து மொழியியல் பேராசிரியர் ட்டி.பர்ரோ, அமெரிக்கப் பேராசிரியர் எம்.பி.எமனோ ஆகியோரின் பாராட்டைப் பெற்றுள்ளது.

மொழிச் செம்மையைக் காக்கும் அகரமுதலிப் பணி நீடித்து செயற்பட வேண்டிய முதன்மையுடையதாகிறது. அதனால்தான் ஆங்கிலம் போன்ற மேனாட்டு மொழிகளில் அகரமுதலிப் பணி குறிப்பிட்ட திட்ட அளவில் முடிந்தாலும் திருந்திய மடலங்களையும், இணைப்பு மடலங்களையும் அடுத்தடுத்து வெளியிட்டு வருவதைக் காணலாம். அகரமுதலி என்பது எழுத்து வழக்கிலும் பேச்சு வழக்கிலும் உள்ள சொல்லாட்சிகளில் ஒப்புதப்புகளைச் செப்பப்படுத்திக் காட்டும் துலாக்கோல் போன்றது. அதனால் தான் dictionary brings people closer to a perfect language என்கின்றனர்.

இதுவரை செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி வெளியீடுகளின் வரிசையில் வெளியிடப்பட்ட 31 தொகுதிகளுக்கும் 12000 பக்கங்களுடன் கொண்ட பேரகரமுதலியை 1000 பக்கங்கள் கொண்ட 12 பெரும் மடலங்களாக ஒரே சீரான வடிவில் திருந்திய பதிப்பாக வெளியிட – தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும் சிறப்புக்கும் ஆக்கமும் ஊக்கமும் கொண்டு செயலாற்றிவரும் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா** அவர்களின் ஆணைக்கிணங்க, தொகுப்புப் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் கா.மு.சேகர், எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி., அவர்கள் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் இயக்குநர் பதவியினை முழுக் கூடுதல் பொறுப்பில் 1.10.2011 முதல் கவனித்து வருகின்றார்கள்.

இவ்வியக்ககம் கீழ்க்கண்ட முகவரியில் தற்போது இயங்கி வருகிறது:–


செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்,
சி.48, தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய அலுவலக வளாகம்,
இரண்டாவது நிழற்சாலை, அண்ணா நகர்,
சென்னை–600 040.
தொலைபேசி (அலு.): 044 26215023
நிகரி (அலு.) : 044 26214824